இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம், சங்கரன்கோவில்
(சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்)

முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,
இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை
தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05 –ஆம் நாள் புதன் கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி திங்கள் 20–ஆம் நாள்)

இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை அசல் மனு எண்.86/2019

C.N.R.No.**TNTS07-000785-2019**

1. பழனி

2. மகாலெட்சுமி .....மனுதாரர்கள்/கோரிக்கையாளர்கள்

–எதிர்–

1. மா.மணிகண்டன்
2. வீ.கணேசன் (இறப்பு)
3. மைனர் க.விஜயலெட்சுமி
4. மைனர் க.தங்கமலை
5. மைனர் க.அஜித் அகர்கர்
6. மைனர் வீ.வீரலட்சுமி

(4, 5, 6 மனுதாரர்கள் நீதிமன்ற பாதுகாவலர் மூலம்)

7. கிளை மேலாளர்,
இப்போ டோக்யோ ஜெனரல் இன்சூரன்ஸ்
கம்பெனி லிமிடடு., பாளையம்கோட்டை ...எதிர்மனுதாரர்கள்

(இடைநிலை மனு எண்.04/2023–ல் கடந்த 20.02.2023 அன்று பிறந்த உத்தரவின்படி இறந்துபோன 2ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளாக 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் கட்சி சேர்க்கப்பட்டும் மற்றும் 7ம் எதிர்மனுதாரர் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்)

இம்மனுவானது 29.06.2026 அன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள்

திருவாளர்.மு.மகேஷ்குமார் மற்றும் திருமதி.ஜ.ஆவுடையம்மாள் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.T.காந்திகுமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவம் இல்லாமலும், மேற்படியாரை அழைத்தும் ஆஜராகாமலும், எதிருரை தாக்கல் செய்யாமல் இருந்து வந்ததால் மேற்படியார் ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவம் இல்லாமலும், மேற்படியாரை அழைத்தும் ஆஜராகாமலும் இருந்து வந்ததால் மேற்படியார் தோன்றா தரப்பராக தீர்மானிக்கப்பட்டும், 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற பாதுகாவலர் திருவாளர்.சி.சங்கரநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 7ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.ஏ.நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>உத்தரவு</u>

விபத்தினால் இறந்துபோன கார்த்திக்குமார் என்பவரின் இழப்பினால் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்காக இழப்பீடாக எதிர்மனுதாரர்களிடமிருந்து ரூ.30,00,000/ –மும், அத்தொகைக்கு பின்வட்டி மற்றும் வழக்கு செலவு தொகை கோரி மனுதாரர்களால் இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை சட்டம் பிரிவு 163(A)இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>**சீர்திருத்தம் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**</u>

1ம் மனுதாரரின் மகனும், 2ம் மனுதாரரின் சகோதரனுமான கார்த்திக்குமார் 13.02.2018 ஆம் தேதியன்று இரவு 11.45 மணிக்கு 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 1ம் எதிர்மனுதாரர் வசம் இருந்த TN 79 B 2742 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் பைக்கினை ஓட்டிச்செல்லும்போது நிலைதடுமாறி இராமசாமியாபுரம் இரண்டாம் தெருவில் உள்ள 2வது தண்ணீர் தொட்டி சுவற்றின் மீது மோதி தலையில் பலத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்து காயமடைந்து, சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பலனின்றி 15.02.2018 இல் இறந்துவிட்டார். பின்பு கொடுத்த தகவலின் பேரில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டி சென்ற ஓட்டுநர் மீது சங்கரன்கோவில் நகர காவல்நிலைய குற்ற எண்.89/2018 இதச பிரிவுகள் 279, 337 இன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

2.2. விபத்திற்கு முன்பு இறந்துபோன கார்த்திக்குமார் திடகாத்திரமாக இருந்து கார் ஓட்டுநராக பணிபுரிந்து அதன் மூலம் மாதம் ரூ.20,000/–ம் வருமானம் ஈட்டி வந்துள்ளார். எனவே விபத்தினால் இறந்துபோன கார்த்திக்குமார் என்பவரின் இழப்பினால் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்காக எதிர்மனுதாரர்கள் இழப்பீடாக ரூ.30,00,000/ –ம் கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

3. <u>4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>

மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தவறானவை. விபத்தின்போது இறந்துபோன கார்த்திக்குமாருக்கு வயது 24 என்பதும், விபத்திற்கு முன்பு கார் ஓட்டுநர் தொழில் செய்து மாதம் ரூ.20,000/–ம் வருமானம் ஈட்டிவந்து தனது குடும்பத்தாரான மனுதாரர்களை நல்லமுறையில் பேணி பராமரித்து பாதுகாத்து வந்தார் என்பதையும் மனுதாரர்கள் தகுந்த ஆவணங்களுடன் நிரூபித்துப்போக கடமைப்பட்டுள்ளார்கள். 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 79 B 2742 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை கார்த்திக்குமார் போக்குவரத்து விதிகளை கடைபிடித்து நிதானமாக ஓட்டிச்சென்றார். இந்த விபத்து 2ம் எதிர்மனுதாரருக்கு தெரிந்த 1ம் எதிர்மனுதாரர் பைக்கை இரவல் வாங்கிச்சென்று அவரது நண்பர் கார்த்திக்குமாரிடம் கொடுத்தபோது இராமசாமியாபுரம் இரண்டாம் தெரு தண்ணீர் தொட்டி அருகே நடந்தது. அன்று கார்த்திக்குமார் ஓட்டிச்சென்ற வாகனத்தை தொடர்ந்து ஜோதிமுருகன் என்பவர் அவருக்கு சொந்தமான TVS Jupiter இருசக்கர வாகனத்தில் செல்லும்போது கார்த்திக்குமார் நிலை தடுமாறி தெருவில் இருக்கிற இரண்டாவது தண்ணீர் தொட்டியின் சுவற்றில் மோதி கீழே விழுந்துள்ளார். இதைப்பார்த்த ஜோதிமுருகனும், தங்கமுத்துவும் சேர்ந்து கார்த்திக்குமாரை இருசக்கர

வாகனத்தில் ஏற்றி சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதலுதவிக்கு சேர்த்து மேல்சிகிச்சைக்கு திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு சிகிச்சை பலனின்றி கார்த்திக்குமார் இறந்துவிட்டார்.

3.2. மேற்படி இறந்துபோன கார்த்திக்குமார் 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 79 B 2742 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனம் 7ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு 13.02.2018 இல் அமலில் இருந்தது. தனிநபர் விபத்து காப்பீட்டிற்கு ரூ.50/−ம் பிடிக்கப்பட்டு அதன் உச்சபட்ச வரையறையாக ரூ.1,00,000/−ம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு இழப்பீடு ஏதும் வழங்குவதாக இருந்தால் எந்தவகையிலும் அதனை 7ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் ஈடு செய்ய கடமைப்பட்டுள்ளது. மனுதாரர்கள் பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகைகள் மிகவும் அதிகமானதாகும். எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. 7<u>ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:−</u>

மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தவறானவை. இறந்து போனவர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டிசென்று தண்ணீர் தொட்டியில் மோதி இறந்து போய்விட்டார். மேலும் இறந்து போன கார்த்திக்குமார் மீது சங்கரன்கோவில் நகர காவல்நிலைய குற்ற எண்.89/2018 இதச பிரிவுகள் 279, 304(A)குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் Action dropped என குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறந்து போனவரின் கவனமின்மை காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளதால் மனுதாருக்கு இழப்பீடு கிடைக்கதக்கது அல்ல. மேலும் விபத்திற்குள்ளான வாகனத்தின் காப்பீடு பாலிசியான liability policy ஆகும். மேலும் இறந்து போன நபர் 3ம் தரப்பினர் ஆகமாட்டார். எனவே இறந்து போன கார்த்திக்குமாரின் இழப்புக்காக மனுதார்களுக்கு இழப்பீடு கிடைக்கதக்கது அல்ல.

4.2. மேலும் இம்மனுவானது மோட்டார் விபத்து சட்டம் பிரிவு 163(A)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இறந்து போனவரின் மாத வருமானம் ரூ.20,000/– என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மோட்டார் விபத்து சட்டம் பிரிவு 163(A)ன் கீழ் தாக்கல் செய்யபட்ட இம்மனு நிலைக்கதக்கது அல்ல. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4.3. மேலும் விபத்திற்குள்ளான வாகனத்தினை 2ம் எதிர்மனுதார் 1ம் எதிர்மனுதாருக்கு விற்பனை செய்துள்ளார். மேற்படி விவரம் இந்த எதிர்மனுதாருக்கு சொல்லப்படவில்லை. 1ம் எதிர்மனுதார் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. மேலும் இறந்துபோன கார்த்திக்குமார் கார் ஓட்டுநராக பணிபுரிந்து மாதம் ரூ.20,000/– சம்பாதித்து வந்தார் என்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது. மேலும் 1ம் எதிர்மனுதார் இறந்து போனவரின் தந்தை என்பதாலும், 2ம் எதிர்மனுதார் இறந்து போனவரின் சகோதரி மற்றும் திருமணமானவர் என்பதாலும், அவர்கள் இறந்து போனவரை சார்ந்து இருக்கவில்லை. மேலும் மனுதார்களால் பல்வேறு தலைப்புகளில் கோரப்பட்டுள்ள இழப்பீடு மற்றும் வட்டி தொகை அதிகமானது ஆகும். எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

5. மனுதாரர்களின் மனு, எதிர்மனுதாரர்களின் எதிருரை மற்றும் வழக்காணவங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையில் இத்தீர்ப்பாயத்தால் இம்மனுவின் தீர்வாக கீழ்க்கண்ட பிரச்சனைகளை ஆய்வுக்காக எடுத்துக்கொண்டுள்ளது.

ஆய்வுக்குரிய பிரச்சினைகள்:

1. மனுதாரர்களுக்கு மோட்டார் வாகன விபத்து சட்டம் பிரிவு 163(A)ன் கீழ் இழப்பீடு கிடைக்கத்தக்கதா?
2. எதிர்மனுதாரர்கள் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர்களா?

6. மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரர் பழனி என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு மேற்படியார் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.1 ஆக சங்கரன்கோவில் நகர காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எம.சா.2 ஆக, 7ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு கழகம், திருநெல்வேலி அலுவலகத்தின் சட்ட அலுவலர் சுசீலன் ஜான் என்பவர் விசாரிக்கப்பட்டு மேற்படியார் மூலம் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7. **<u>பிரச்சினை எண்.1 மற்றும் 2 க்கான தீர்வு:</u>**

மனுதார்கள் தரப்பில், விசாரணை செய்யப்பட்ட ம.சா.1 தனது சாட்சியத்தில், 1ம் மனுதாரரின் மகனும், 2ம் மனுதாரரின் சகோதரனுமான கார்த்திக்குமார் 13.02.2018 ஆம் தேதியன்று இரவு 11.45 மணிக்கு 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 1ம் எதிர்மனுதாரர் வசம் இருந்த TN 79 B 2742 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் பைக்கினை ஓட்டிச்செல்லும்போது நிலைதடுமாறி இராமசாமியாபுரம் இரண்டாம் தெருவில் உள்ள 2வது தண்ணீர் தொட்டி சுவற்றின் மீது மோதி தலையில் பலத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்து காயமடைந்தார் என்றும், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பலனின்றி 15.02.2018 இல் இறந்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது.

7.2. அடுத்ததாக, மனுதார்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ம.சா.ஆ 5 ஆவணத்தில் உள்ள முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில், கடந்த 13.02.2018 ஆம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 79 B 2742 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் பைக்கினை இரவு 11.45 மணிக்கு கார்த்திக்குமார்

ஓட்டிச் செல்லும்போது அவரை பின் தொடர்ந்து புகார்தாரர் அவருக்கு சொந்தமான TN 79 D 4185 என்ற பதிவெண் கொண்ட டிவிஎஸ் ஜீபிடர் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது மேற்படி கார்த்திக்குமார் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்றதால் நிலைதடுமாறி மேற்படி தெருவிலிருக்கிற 2 வது தண்ணீர் தொட்டி சுவற்றின் மீது மோதி தலையில் பலத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்பதாக இறந்துபோன கார்த்திக்குமார் என்பவர் மீது சங்கரன்கோவில் நகர காவல்நிலையத்தில் குற்ற எண்.89/2018, இ.த.ச., 279, 337 பிரிவுகளின்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

7.3. எனவே மேற்கண்ட மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் பரிசீலனையிலிருந்து 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டி சென்ற ஓட்டுநரும், 1ம் மனுதாரரின் மகனும், 2ம் மனுதாரரின் சகோதரனுமான கார்த்திக்குமார் என்பவரின் கவனக்குறைவின் காரணமாகவே விபத்து ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

7.4 மேலும் விபத்திற்குள்ளான வாகனம் விபத்து சமயத்தில் 2ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது ம.சா.ஆ.5, மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் எ.ம.சா.ஆ.1ன் மூலம் தெரியவருகிறது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ.ம.சா.ஆ.1 இன்சூரன்ஸ் பாலிசி ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி வாகனமானது 7 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மேலும் மேற்படி பாலிசி என்பது Package பாலிசி என்பதும் அதன்படி Personal Accident Coverage ஆனது owner – driver க்கு மட்டுமே உள்ளது என்பது தெரியவருகிறது.

7.5. எனவே இறந்துபோன கார்த்திக்குமார் 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை 1ஆம் எதிர்மனுதாரரிடம் இரவல் பெற்று மேற்படி வாகனத்தை ஓட்டி வந்துள்ளார் என்றும், மேலும் கடந்த 13.02.2018 ஆம் தேதியன்று நடைபெற்ற விபத்தில் 1ம் மனுதாரரின் மகனும், 2ம் மனுதாரரின் சகோதரனுமான கார்த்திக்குமார் என்பவருக்கு காயங்கள் ஏற்பட்டு இறந்துபோயுள்ளார் என்றும், மேலும்

இந்த மனுவானது மோட்டார் வாகன விபத்து சட்டம் பிரிவு 163A ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால், விபத்திற்குள்ளான வாகனத்தை ஓட்டிவந்த இறந்துபோன கார்த்திக்குமார் என்பவரின் கவனமின்மையை நிரூபிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், எனவே 7 ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டுள்ளது என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

7.6. எனவே விபத்தில் இறந்துபோன கார்த்திக்குமார் என்பவர் விபத்து சமயத்தில், 2 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை 1 ஆம் எதிர்மனுதாரரிடம் இரவல் பெற்று மேற்படி வாகனத்தை ஓட்டி வந்துள்ளார் என்பதாலும், இந்த மனுவானது மோட்டார் வாகன சட்டம் பிரிவு 163A ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாலும், மேலும் 163A ன் கீழ் கவனமின்மையை நிரூபிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதாலும், 1 ம் மனுதாரரின் மகனும், 2 ம் மனுதாரரின் சகோதரனுமான இறந்துபோன கார்த்திக்குமார் என்பவரின் இழப்பிற்காக மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில், இதுசம்மந்தமாக The New India Assurance Co., Ltd., Represented by it's Manager Vs Ravi and another in C.M.A.No.1426/2017, dated 01.04.2021 எனும் வழக்கில் பின்வருமாறு கண்டுள்ளது.

> 9. Further, claim by tortfeasor against its own insurer is not maintainable under section 163-A of the Motor Vehicle Act. The law on this point is no more res integra after the judgment of the Hon'ble Supreme Court in Ningamma and others -Vs- United India Insurance Company Limited reported in 2009 (2) TN MAC 169 (SC). Further, when compensation sought under section 163-A of the Act, it shall be only in tune with the structured formula given under Schedule-II of the M.V. Act and compensation shall be only in accordance with the schedule. The award of the Tribunal for mental agony, extra nourishment and transport are not provided under the schedule and the compensation awarded for these heads are not sustainable. Without evidence that the injury sustained by the claimant had caused loss of earning capacity, the tribunal has applied the multiplier method.
>
> 10. Section 163-A of the Motor Vehicles Act was introduced by an amendment in the year 1994, to provide quick remedy for poor claimants whose income is less than Rs.40,000/- p.a. The burden of proving negligence was relieved so as to avoid delay in getting due and fair compensation. In Deepal Girishbhai Soni and others -vs-

United India Insurance Company Limited reported in 2004 (5) SCC 385, the Hon'ble Supreme Court held at paragraph No.51 that,

> “51. The scheme as envisaged under Section 163-A, in our opinion, leaves no manner of doubt that by reason thereof the rights and obligations of the parties are to be determined finally. The amount of compensation payable under the aforementioned provisions is not to be altered or varied in any other proceedings. It does not contain any provision providing for set-off against a higher compensation unlike Section 140. In terms of the said provision, a distinct and specified class of citizens, namely, persons whose income per annum is Rs 40,000 or less is covered thereunder whereas Sections 140 and 166 cater to all sections of society.” ....

And paragraph No.67 held that,

> “We, therefore, are of the opinion that Oriental Insurance Company Limited v. Hansrajbhai v. Kodala's reported in (2001) 5 SCC 175, has correctly been decided. However, we do not agree with the findings in Kodala (supra), that if a person invokes provisions of Section 163-A, the annual income of Rs.40,000/- shall be treated as a cap. In our opinion, the proceeding under Section 163-A being a social security provision, providing for a distinct scheme, only those whose annual income is upto Rs.40,000/- can take the benefit thereof. All other claims are required to be determined in terms of Chapter XII of the Act."

11. Thus, it is sound and clear that no petition were the income is more than Rs.40,000/- p.a is maintainable under Section 163-A of the Motor Vehicles Act and the award passed in the claim petition under section 163-A of the Act, shall not be more than the award fixed under structured formula mentioned under the schedule II of the Act.

12. Regarding claim petition filed against the own insurer, whether by the owner or by his employee, they are not third parties. Section 163-A of the Act gives the privilege of exemption to prove negligence only in case of third party claim.

13. In Oriental Insurance Company Ltd -vs- Rajni Devi and others reported in (2008) 5 SCC 736, it has been categorically held that, in a case where third party is involved, the liability of the insurance company would be unlimited. It was also held however, where the compensation is claimed for the death of the owner or another passenger of the vehicle, the contract of insurance being governed by the contract qua contract, the claim of the claimant against the insurance company would depend upon the terms thereof. It was held in the said decision that Section 163-A of the Motor Vehicles Act, cannot be said to have any application in respect of an accident wherein the owner of the motor vehicle himself is involved.

14. In the recent judgment of the Hon'ble Supreme Court rendered in Ram Khiladi & another -vs- The United India Insurance Company & another reported in 2020 (1) CTC 443, the Apex Court has put at rest the debate by holding,

"9.5 It is true that, in a claim under Section 163-A of the Act, there is no need for the claimants to plead or establish the negligence and/or that the death in respect of which the claim petition is sought to be established was due to wrongful act, neglect or default of the owner of the vehicle concerned. It is also true that the claim petition under Section 163-A of the Act is based on the principle of no fault liability. However, at the same time, the deceased has to be a third party and cannot maintain a claim under Section 163A of the Act against the owner/insurer of the vehicle which is borrowed by him as he will be in the shoes of the owner and he cannot maintain a claim under Section 163A of the Act against the owner and insurer of the vehicle bearing registration No. RJ 02 SA 7811. In the present case, the parties are governed by the contract of insurance and under the contract of insurance the liability of the insurance company would be qua third party only. In the present case, as observed herein above, the deceased cannot be said to be a third party with respect to the insured vehicle bearing registration No. RJ 02 SA 7811. There cannot be any dispute that the liability of the insurance company would be as per the terms and conditions of the contract of insurance. As held by this Court in the case of Dhanraj (supra), an insurance policy covers the liability incurred by the insured in respect of death of or bodily injury to any person (including an owner of the goods or his authorized representative) carried in the vehicle or damage to any property of a third party caused by or arising out of the use of the vehicle. In the said decision, it is further held by this Court that Section 147 does not require an insurance company to assume risk for death or bodily injury to the owner of the vehicle.

9.6 In view of the above and for the reasons stated above, in the present case, as the claim under Section 163A of the Act was made only against the owner and insurance company of the vehicle which was being driven by the deceased himself as borrower of the vehicle from the owner of the vehicle and he would be in the shoes of the owner, the High Court has rightly observed and held that such a claim was not maintainable and the claimants ought to have joined and/or ought to have made the claim under Section 163A of the Act against the driver, owner and/or the insurance company of the offending vehicle i.e. RJ 29 2M 9223 being a third party to the said vehicle."

15. In the instant case also, the owner of the other vehicle namely mini trax van is not party. The criminal case for negligence registered against the claimant. The claim petition filed under section 163-A of the Act against his the owner and the insurer of the vehicle he was

driving. Therefore, unless the terms of the contract provides for any insurance coverage, the claimant, who does not cover under section 147 of the Act.

16. In the light of the Hon'ble Supreme Court judgment in Ram khiladi cited supra, the Insurance Company liability to pay compensation to the driver of the vehicle insured under them depends on the terms of contract under the insurance policy. The perusal of the Insurance policy marked as Ex.R-1 indicates the vehicle driven by the claimant is covered by package policy with Limited liability for Personal Accident cover of owner driver. The claimant as paid employee under the owner of the vehicle is entitled to claim compensation only under the Workman Compensation Act and the petition under section 163-A of the Act, is not maintainable for the reasons stated above.

17. Therefore, the Tribunal award impugned in this appeal is liable to be set aside. Accordingly, the Civil Miscellaneous Appeal is Allowed. The award passed in M.C.O.P.No.249 of 2015 on the file of Motor Accident Claims Tribunal, (District Judge), Krishnagiri dated 21.11.2016 is hereby set aside. The claimant is at liberty to file petition under Workman Compaction Act, 1923, before the appropriate forum and seek for remedy. The time spent on the claim petition and appeal shall be condoned for reckoning limitation if any.

18. In the result, the Civil Miscellaneous Appeal is Allowed. No order

7.7. மேலும் National Insurance Co. Ltd., Tirunelveli Vs Mahalakshmi and 6 others 2024(1) TN MAC 34 (DB) எனும் தீர்ப்பில் பத்தி 19 ல் பின்வருமாறு கண்டுள்ளது.

" On perusal of various Judgments, we cull out the following principles of law:

(i) The risk of the Owner or Borrower or Permissive User of the vehicle involved in the accident and consequent claim arising thereunder is not covered under Section 147 of the M.v. Act;

(ii) It does not matter whether the claim in the above cases are made under Section 163-A or Section 166 of the M.V. Act;

(iii) Similarly, the policy being an Act Policy or a Package/ Comprehensive Policy also makes no difference.

(iv) Even the issue of negligence becomes wholly irrelevant if Section 147 of the Act does not cover the rider, being the Owner (or Borrower or friend of the Owner or a Permissive User);

(v) Equally, it does not also matter if the Owner / insured was driving/ riding the vehicle or whether he was traveling in the vehicle, at the time of the accident;

(vi) In all the above instances, the Insurance Company is not liable as their liability is purely contractual vis-a—vis the Owner /insured of the vehicle;

(vii) Even though Section 28 of the E.S.I. Act will not cover an accidental death and recourse will have to be taken under general law, in the event of the victim being an Employee and the injury was an employment injury arising out of an accident where the victim himself was a tort- feaser, then a claim under the M.V. Act is not maintainable;

(viii) If Compensation is received under the E.S.I. Act then no Compensation can be claimed before the Motor Accident Claims Tribunal; and

(ix) In the event of the claim being made as a Third party, then the Claimants are entitled to choose either of the two fora, namely, the Tribunal dealing with the Motor Vehicles Act or the Tribunal dealing with the Employees' Compensation Act, 1923, depending upon the benefits that the Claimants may get before either of them, a choice which is to be made by the Claimants. The bar, however, is that such a claim cannot be made under both the Acts".

7.8. எனவே மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில், விபத்தில் இறந்துபோன கார்த்திக்குமார் 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை 1ஆம் எதிர்மனுதாரரிடம் இரவல் பெற்று ஓட்டி சென்றுள்ளதால் மேற்படி கார்த்திக்குமார் உரிமையாளராகவே கருதப்படுவார். எனவே விபத்தில் காயமடைந்து இறந்துபோன கார்த்திக்குமார் 3ம் தரப்பினர் ஆகமாட்டார். மேலும் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 163A ன் கீழ் 3ம் தரப்பினர்களுக்கு மட்டுமே இழப்பீடு கிடைக்கத்தக்கது.

7.9. மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட TATA AIG General Insurance Co. Ltd., Vs Geetha and 4 others 2025(1) TN MAC 102, Iffco Tokio General Insurance Co. Ltd., Vs K.Pazhanivel and two others 2023(1) TN MAC 73 (DB) ஆகிய முன்தீர்ப்புகளை பரிசீலனை செய்கையில் வாகனத்தை இரவல் பெற்று வாகனத்தை

ஓட்டுபவரும் உரிமையாளர் என்று கருதப்படுவர் என்றும், அவர் 3ஆம் நபராக கருதப்படமாட்டார் என்றும், அவருக்கு மோட்டார் வாகன விபத்து சட்டம் பிரிவு 163(A)ன் கீழ் இழப்பீடு கிடைக்கத்தக்கது என்றும் கண்டுள்ளது.

7.10. எனவே விபத்து சமயத்தில் வாகன உரிமையாளரான 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை 1ஆம் எதிர்மனுதாரரிடம் இரவல் பெற்று ஓட்டி சென்று இறந்துபோன கார்த்திக்குமார் என்பவரின் வாரிசுதாரர்களான மனுதாரர்களுக்கு மோட்டார் வாகன சட்டம் பிரிவு 163A ன் கீழ் இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

7.11. மேலும் எ.ம.சா.ஆ.1 காப்பீட்டு பாலிசியானது Personal Accident Coverage Policy யை பொருத்து Owner – Driver க்கு மட்டுமே சந்தா கட்டப்பட்டுள்ளது. மேலும் Personal Accident Coverage Policy யின் படி மேற்படியார்களுக்கு ரூ.1,00,000/–ம் மட்டுமே இழப்பீடாக கிடைக்கத்தக்கது என்பது தெரியவருகிறது.

7.12. இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களுக்கு Personal Accident Coverage படி இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என்றும் இது சம்பந்தமாக K.Indumathi and 2 others Vs M.Periyasamy and one another 2020(2) TN MAC 650, Tamil Ilakkiya and 3 others Vs Branch Manager, Oriental Insurance Co. Ltd., 2023(1) TN MAC 84, ஆகிய முன் தீர்ப்புகளை சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது.

7.13. ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட National Insurance Co.Ltd., Puducherry Vs Rani and 5 others 2020(1) TN MAC 593 மற்றும் Divisional Manager, Oriental Insurance Co. Ltd., Vs Suresh Kumar and 2 others 2020(1) TN MAC 540 ஆகிய முன்தீர்ப்புகளை பரிசீலனை செய்கையில் பதிவு செய்யப்பட்ட உரிமையாளருக்கு மட்டுமே Personal Accident Coverage படி இழப்பீடு வழங்க முடியும் என்றும், கோரிக்கையாளர் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் கிடையாது என்பதால் அவருக்கு இழப்பீடு வழங்க உத்தரவிடமுடியாது என்றும் கண்டுள்ளது.

7.14. எனவே மேற்கண்ட முன்தீர்ப்புகளை பரிசீலரனை செய்கையில் இறந்து போனவர் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் கிடையாது என்பதால் அவருக்கு personal accident Coverage ன் கீழ் இழப்பீடு கிடைக்கதக்கது அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7.15. மேலும் Tata Aig General Insurance Company Vs Govindarajan C.M.A.No.4862 of 2019 and C.M.P.No.28014 of 2019, dated 10.09.2020 எனும் முன் தீர்ப்பில் பத்தி 37 இல் பின்வருமாறு கண்டுள்ளது.

> “This being the distinct factors, which are to be ascertained with reference to the nature of insurance policy, all the Tribunals are bound to look into the nature of the Policy at the first instance, before entertaining the Claim Petition. The Litigants should not be unnecessarily driven to various Courts by waiting for a long period before the Accident Claims Tribunal, Whenever a Claim Petition is filed, either under Section 166 or under Section 163-A of the Act or otherwise, the entertainability as well as the maintainability of the Claim Petitions are to be verified with reference to the nature of the policies issued by the Insurance Company – Contrarily, the Tribunal cannot adjudicate the terms and conditions agreed between the parties in a contract and grant compensation by invoking the provisions under the Motor Vehicles Act.”

7.16. எனவே மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில் personal accident coverage–யை பொருத்து இழப்பீடு வழங்க உத்தரவிடுவதற்கு இவ்வாயத்திற்கு அதிகாரம் இல்லை என்பது தெரியவருகிறது. எனவே personal accident coverage–யை பொருத்து இவ்வாயம் எதிர்மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க உத்தரவிட முடியாது என இவ்வாயம் முடிவு செய்கின்றது. எனவே விபத்தில் இறந்துபோன கார்த்திக்குமார் என்பவரின் வாரிசுதாரர்களான மனுதாரர்களுக்கு Personal Accident Coverage ன் கீழ் இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

7.17. எனவே மேற்கண்ட பரிசீலனையிலிருந்து விபத்தில் இறந்துபோன கார்த்திக்குமார் என்பவரின் வாரிசுதாரர்களான மனுதாரர்களுக்கு மோட்டார் வாகன விபத்து சட்டம் பிரிவு பிரிவு 163A ன் கீழ் இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றும், 2 ம் எதிர்மனுதாரர் மற்றும் 7 ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் விபத்தில் இறந்துபோன கார்த்திக்குமார் என்பவரின் வாரிசுதாரர்களான மனுதாரர்களுக்கு மோட்டார் வாகன விபத்து சட்டத்தின் கீழ் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என தீர்மானித்து பிரச்சனை 1 மற்றும் 2 க்கு இவ்வாயத்தால் விடையளிக்கப்படுகிறது.

8. **இறுதியாக,** மனுதாரர்களின் இழப்பீட்டு கோருரிமை மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P
Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.08.05 20:10:12 +0530

இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை
தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:

ம.சா.1 திரு.பழனி (1 ம் மனுதாரர்)

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:

எ.ம.சா.1 திரு.எஸ்.ரவிச்சந்திரன் (சங்கரன்கோவில் நகர காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர்)

எ.ம.சா.2 சுசீலன் ஜான் (7 ம் எதிர்மனுதாரர் காப்பீட்டுக் கழகம் திருநெல்வேலி அலுவலக சட்ட அலுவலர்)

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:

ம.சா.ஆ.1	---	1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ஒளிநகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது
ம.சா.ஆ.2	---	1ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் ஒளிநகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது
ம.சா.ஆ.3	---	2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ஒளிநகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது
ம.சா.ஆ.4	---	2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் ஒளிநகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது
ம.சா.ஆ.5	---	சங்கரன்கோவில் டவுண் காவல்நிலைய குற்ற எண்.89/2018ன் முதல் தகவல் அறிக்கை, குற்ற இறுதியறிக்கை, விபத்து பதிவே, பிரேத பரிசோதனை அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், விபத்தில் ஈடுபட்ட வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, மேற்படி வாகனங்களின் பதிவு சான்று நகல்கள் அனைத்தும் மொத்த தொகுப்பு தகவல் அறியும் உரிமை சட்டத்தில் பெறப்பட்ட நகல்கள்
ம.சா.ஆ.6	---	இறந்துபோன கார்த்திக்குமாரின் ஓட்டுநர் உரிமம் ஒளிநகல்

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:

எ.ம.சா.ஆ.1	---	TN 79 B 2742 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி நகல்
எ.ம.சா.ஆ.2	--	குற்ற இறுதியறிக்கை உண்மை நகல்

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.08.05 20:10:22 +0530

இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை
தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்.

இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) சங்கரன்கோவில்

இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டு கோருரிமை அசல் மனு எண்.86/2019

உத்தரவு (அசல்/வரைவு)

நாள் 05.08.2026